முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1463

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.10.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. பேருலகை காக்க வந்த பிரம்மனே
பிரம்ம மகா அஸ்திரம்போல் இந்த உலகில்
வரம்பல தந்து எல்லோர்க்கும் காப்பு
வள்ளலாக வாரிவழங்கி வருகின்ற குருராஜனே
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 14ம் நாள், 01.10.2023, ஞாயிற்றுக்கிழமை)
அரங்கன் நாமம் அகிலத்தை காப்பது உறுதி
ஆசிதந்து அரங்கன் தரும் தீட்சை அகிலத்திற்கே அறம்வேலியாக நிற்பது உறுதி
3. உறுதிகொண்டு அரங்கன் திருவடியை
உண்மை ஞானமாகக் கருதி உலகோர்
கருதிவந்து தொடர்ந்து வணங்கி அரங்கன்
கரங்கள் பட தருகின்ற தீட்சையோடு
4. அரங்கன் ஆசிபெற்ற அருளமுதை உண்டு
அரங்கன்வாழ் தென்கயிலை பிரணவக்குடிலை
அச்சமற தொடர்ந்து வந்து
அனுகி ஆசிப்பெற்றுக் கொண்டு
5. கொண்டுமே கலியுகத்தில் அரங்கன் நாமஜெபத்தை
கந்தபெருமான் மகாசக்தியாக எண்ணி உலகோர்
சிந்தை வைத்து ஜெபதெபங்கள் கூறி
சேவைவழி நின்று தொடர்ந்தால் போதும்
6. போதுமப்பா வருகின்ற மக்களெல்லாம்
வையகத்தில் வடிவேலன் என்னை காணும் காட்சி
பெருமைபட அடைந்து சடுதி இந்த பேருலகில்
பிறவாப்பேறு உலகோர் அனைவரும் அடையக்கூடும்

7. கூடவே அரங்கன் ஞானம் குவலயத்தை மீட்கும்
நாடெங்கிலும் அரங்கன் செய்யும் தர்மம் நல்வழி காட்டும்
காட்டவே அரங்கன் வழி தொண்டர் படைகளே
கலியுகத்தை ஆளும் வண்ணம் சக்திபெருகி கட்டாயம் ஞான
ஆட்சிக்காலம் உதயமாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–